## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - விடுதிகள் - ஆதிதிராவிடர் நல பள்ளி விடுதிகள் மற்றும் கல்லூரி விடுதிகளில் பயிலும் மாணாக்கர் சேர்க்கைக்கான விதிமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை**

அரசாணை (நிலை) எண்.53

நாள்: 01.07.2022
சுபகிருது ஆண்டு
ஆனி 17 - ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண். 195, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.4)துறை, நாள். 02.08.1991.
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க.எண். த1/8185/2022, நாள் 13.05.2022.

********

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கி கல்வி பயில்வதற்காக விண்ணப்பிக்கும் மாணாக்கரைத் தேர்வு செய்வதற்கான ஆலோசனைக்குழுவினை (Advisory committee for selection of students for admission into Government hostels) பின்வருமாறு மாற்றி அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

த.பி.பா.

<u>அரசு அலுவலர்</u>

| | | |
|---|---|---|
| மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் | - | தலைவர் |
| அப்பகுதியில் உள்ள ஒரு பள்ளித்தலைமை ஆசிரியர் அல்லது கல்லூரி முதல்வர் | - | உறுப்பினர் |
| மாவட்ட தலைநகர் விடுதிகளுக்கு மாவட்ட கல்வி அலுவலர் மற்ற விடுதிகளுக்கு கல்வி ஆய்வாளர் | - | உறுப்பினர் |

<u>அரசு அலுவலரல்லாதோர்</u>

| | | |
|---|---|---|
| தொகுதி சட்டமன்ற உறுப்பினர் | - | 1 |
| ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் | - | 2 |

<u>குறிப்பு</u>

1. தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பிற்படுத்தப்பட்ட அல்லது ஆதிதிராவிடரல்லாத வகுப்பினராயிருப்பின் மற்ற இருவரும் ஆதிதிராவிடராயிருப்பர்.
2. தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆதிதிராவிடராயிருப்பின் மூன்றாவது உறுப்பினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராயிருக்க வேண்டும்.
3. தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர் பதவி வகிக்கும் காலத்தில் அவரின் கருத்திற்கேற்ப ஒருவரை நியமிக்கலாம் மற்றும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவி இடம் காலியாக இருந்தால் மாவட்ட ஆட்சியரே ஒருவரை நியமிக்கலாம்

மேற்கண்ட ஆலோசனைக் குழுவினை (Advisory committees for selection of students for admission into Government hostels) அமைக்கும் அதிகாரம் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டு, இத்தேர்வுக்குழுவின் ஆயுட்காலம் மூன்று ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

...3

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், ஆதிதிராவிடர் இன மாணாக்கர் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் நோக்கில், அவர்கள் தங்கி கல்வி பயில ஏதுவாக ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 1324 விடுதிகள் இயங்கி வருகின்றன எனவும், இவ்விடுதிகளை மேம்படுத்திடும் விதமாகவும், விடுதியினை கணினிமயமாக்கும் நோக்கிலும், விடுதி மேலாண்மை அமைப்பு (Hostel Management System) என்ற செயலி உருவாக்கம் செய்யப்பட்டு, அனைத்து விடுதிக் காப்பாளர் / காப்பாளினிகளுக்கும் தனித்தனியாக பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச்சொல் (Password) வழங்கப்பட்டுள்ளது எனவும் இதனடிப்படையில், விடுதிகளின் அனைத்து விவரங்களையும் (மாணாக்கர், பணியாளர், விடுதிக்கட்டமைப்பு, விடுதிகளுக்குரிய தளவாடப் பொருட்கள் மற்றும் வசதிகள் போன்ற இனங்கள்) சம்மந்தப்பட்ட விடுதிக்காப்பாளர்களால் இணைய வழியில் (Online) பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மேற்படி செயலியின் மூலம் விடுதிகளில் அன்றாடம் கையாளப்பட்டு வரும் பதிவேடுகள், விடுதியில் தங்கும் மாணாக்கரின் விவரங்கள், வருகைப்பதிவேடு, மாணாக்கருக்கு வழங்கப்படும் உணவு போன்ற இனங்களை தினசரி கண்காணித்திட ஏதுவாக வட்ட / மாவட்ட / மாநில அளவில் உள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச்சொல் (Password) வழங்கப்பட்டு மேற்படி அலுவலர்களால் அனைத்து ஆதிதிராவிடர் நல விடுதிகளின் செயல்பாடுகளை கண்காணித்திடும் போது, அதில் ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால், அதனை உடனுக்குடன் நிவர்த்தி செய்திடவும், சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு தக்க நேரத்தில் அறிவுறுத்திடவும், மேற்படி செயலி உறுதுணையாக இருக்கும் எனவும் இந்நேர்வில், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கும் மாணாக்கரை தேர்வு செய்வதில் சில நிர்வாக சிக்கல் ஏற்படுவதால், அதனை சரி செய்திடும் பொருட்டு விடுதி மேலாண்மை அமைப்பு (Hostel Management System) என்ற செயலியின் மூலம் இணைய வழியில் சேர்க்கை நடத்தி மாணாக்கரை தேர்வு செய்திடலாம் என ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

த.பி.பா.

4. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது, அதனடிப்படையில், ஆதிதிராவிடர் நல பள்ளி / கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர் சேர்க்கைக்கான பின்வரும் விதிமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வெளியிடுகிறது :-

<u>விதிமுறைகள்</u>

- ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயில விரும்பும் மாணாக்கர் இணைய வழியில் (online) https:\\tnadw-hms.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணைய வழியில் (online) பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரால் விடுதி வாரியாக பரிசீலனை செய்யப்பட வேண்டும்.
- மேற்படி விண்ணப்பங்களில் தகுதியுள்ள மாணாக்கரை தெரிவு செய்திடும் பொருட்டு, அரசாணை (நிலை) எண். 195, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள். 02.08.1991-இல் தெரிவிக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுவினை (Advisory committees for selection of students for admission into Government of Adi Dravidar Welfare Hostels) கூட்டி மாணாக்கரை தேர்வு செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும் விடுதியில் தங்கிப்பயிலும் மாணாக்கர் புதுப்பித்தல் விண்ணப்பத்தினை (Rrenewal) இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணைய வழியில் விண்ணப்பிக்க தவறிய மாணாக்கர், சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் விண்ணப்பப் படிவம் பெற்று, அதனை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு நேரடியாக பெறப்படும் விண்ணப்பங்களை சிறப்பினமாக கருதி, அவ்விடுதியில் அனுமதிக்கப்பட்ட மாணாக்கரின் எண்ணிக்கையில் காலியிடம் இருக்கும் பட்சத்தில், அவர்களையும் விடுதியில் தங்கி கல்வி பயில மேற்படி குழுவிடம் ஒப்புதல் பெற்று, அனுமதி ஆணை வழங்கப்பட வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட மாணாக்கரின் விவரங்களை இணையவழியில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரால் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

## வழிகாட்டு நெறிமுறைகள்:-

- நான்காம் வகுப்பு முதல் கல்லூரி வரை பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர் (85%), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பின மாணாக்கர் (10%) பிற வகுப்பினர்கள் (5%) என்ற விகிதத்தில் தேர்வு செய்ய வேண்டும்.
- பள்ளிக்கும் வீட்டிற்குமான தொலைவு 5 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். (மாணவியருக்கும், பெற்றோரை இழந்த மாணவர்கள் மற்றும் தாய் அல்லது தந்தை வெளியூர்களில் பணிபுரிந்து பாதுகாவலர் பொறுப்பில் இருக்கும் மாணவர்களுக்கும் மேற்படி நிபந்தனை பொருந்தாது )
- பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/- ற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- மாணாக்கருக்கு கல்வி பயிலும் பள்ளி தலைமையாசிரியர் / கல்லூரி முதல்வரின் சான்று இணைய வழியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். (பள்ளி மாணாக்கருக்கு EMIS எண் மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு மத்திய/மாநில அரசால் கல்வி உதவித்தொகை பெறுவதற்காக இணையத்தின் மூலம் வழங்கப்படும் பதிவு எண் இடம் பெற்றிருக்க வேண்டும் )

  (<u>குறிப்பு :</u> SC, Minority வகுப்பின மாணாக்கருக்கு மத்திய அரசால் இணையத்தின் மூலம் வழங்கப்படும் NSP எண் மற்றும் இதர வகுப்பின மாணாக்கருக்கு மாநில கல்வி உதவித்தொகை பெறுவதற்காக இணையத்தின் மூலம் வழங்கப்படும் பதிவு எண் இடம் பெற வேண்டும்.)
- விடுதியில் தங்கி கல்வி பயில தெரிவு செய்யப்படும் மாணாக்கர் மற்றும் அவர்களின் பெற்றோர்களிடம் விடுதியில் உள்ள பொருட்களை சேதப்படுத்தினாலோ அல்லது விடுதிக் கட்டுப்பாட்டுகளை மீறி செயல்பட்டாலோ அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மேலும் அதற்குண்டான கட்டணம் செலுத்த வேண்டும் எனவும் உறுதி மொழிப் பத்திரம் பெறப்பட வேண்டும்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணாக்கருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

த.பி.பா.

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணாக்கர் இல்லாத நிலையில், அவ்விடுதியில் அனுமதிக்கப்பட்ட மாணாக்கரின் எண்ணிக்கையில் காலியிடம் இருக்கும் நேர்வில், தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணாக்கரையும் தெரிவு செய்யலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசகன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்.</u>
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
<u>நகல்:-</u>
அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.5)துறை, சென்னை - 600 009.
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

01/07/2022
பிரிவு அலுவலர்.
1/7/2022